Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம்:- 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    ஆனி 11    (25 - 06 - 1992)    வியாழக்கிழமை    ஓசை: 128

## மட்டு. பாடசாலைகளில் சிங்களம் கட்டாய பாடம்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல தமிழ் பாடசாலைகளிலும் சிங்கள மொழியை கட்டாய பாடமாக சிறிலங்கா அரசாங்கம் அமுல்படுத்தியுள்ளது. சுமார் முப்பது தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களம் போதிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. சிங்களம் இணைப்புமொழி மட்டுமே என்று அரசாங்கம் குறிப்பிடுகின்ற போதிலும் சிங்களப் பாடசாலைகளில் தமிழ் மொழியை போதிப்பதற்கு எந்த நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளவில்லை என்றும் தெரியவருகிறது சிங்கள அரசானது தென் தமிழீழப் பகுதியை சிங்கள மயமாக்குவதற்கும், தமிழரின் தாயகக் கோட்பாட்டை (4ஆம் பக்கம் பார்க்க

# உலக நாடுகளின் மத்தியஸ்துவத்தை பிரேமதாச அரசாங்கம் நிராகரித்தது

பேராசிரியர் சரவணபவானந்தன் காலமானார்

(கொழும்பு)

யாழ். பல்கலைக்கழக சட்ட மருத்துவ பீடப் பேராசிரியர் என். சரவணபவானந்தன் (4ஆம் பக்கம் பார்க்க)

## சுவீடனுக்கு பதில் எழுத மறுப்பு

(லண்டன்)

"தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச மத்தியஸ்துவ முயற்சிகள் அனைத்தையுமே பிரேமதாசா அரசு நிராகரித்துள்ளது. சமீபத்தில் சுவீடன் அரசாங்கம் மத்தியஸ்துவம் செய்வதற்கு மேற்கொண்ட முயற்சிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கம் கதவடைத்துள்ளது." இவ்வாறு விடுதலைப் புலிகளின் சர்வதேச தலைமையகம் லண்டனிலிருந்து வெளியிட்ட பத்திரிகை அறிக்கை ஒன்றில் சிறிலங்கா அரசு மீது குற்றம் சுமத்தியுள்ளது.

தற்போதைய இனநெருக்கடியைப் சமாதான வழிமூலம் தீர்ப்பதற்கு விடுதலைப்புலிகளுக்கும், சிறிலங்கா அரசாங்கத்துக்கும் மத்தியில் பேச்சுவார்த்தைகள் நடைபெற வேண்டும் எனவலியுறுத்தியும், இத்தகைய பேச்சுவார்த்தைகள் சர்வதேச அரங்கில் நடைபெறும் பட்சத்தில் அதற்கு மத்தியஸ்துவம் வகிக்க தயாராக இருப்பதாகவும் சுட்டிக்காட்டி சுவீடன் பாதுகாப்பு அமைச்சு பிரேமதாசா அரசிற்கும், விடுதலைப்புலிகளுக்கும் உத்தியோக பூர்வமான கடிதங்களை அனுப்பியிருந்தது.

இந்த சமரசமுயற்சியை விடுதலைப்புலிகள் இயக்கம் வரவேற்றது. இந்த முயற்சிக்குப் பாராட்டு தெரிவித்து சுவீடன் வெளிநாட்டு அமைச்சிற்கு புலிகள் இயக்கம் பதில் ஒன்றையும் அனுப்பிவைத்தது. ஆனால், அதேசமயம் பிரேமதாசா அரசு சுவீடன் அரசாங்கத்திற்கு இதுவரையும் எவ்வித பதிலையும் அனுப்பிவைக்கவில்லை.

"தென்னிலங்கையில், பல்வேறு பாரிய பிரச்சினைகளையும், நெருக்கடிகளையும் முகம்கொடுத்துநிற்கும் பிரேமதாசா அரசு இப்பிரச்சினைகளில் இருந்து சிங்கள மக்களை திசைதிருப்பும் நோக்கத்துடன் தமிழ் மக்களுக்கு எதிராக பெரும் இராணுவ நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. பிரேமதாசா அரசின் இந்த இராணுவ நடவடிக்கைகள் தமிழீழ இலட்சிய உறுதிப்பாட்டை மேலும் வலுவடையச்செய்வதற்கே வழிவகுக்கும். துப்பாக்கிகள் மூலமும், டாங்கிகள் மூலமும் ஒரு மக்கள் இனத்தின் சுதந்திர எழுச்சியை நசுக்கிவிடலாம் என பிரேமதாசாஅரசு எண்ணுவது மிகவும் தவறானது அப்பாவி மக்களதும், தியாகிகளதும், இரத்தம் தோய்ந்த மண்ணில் ஆக்கிரமிப்பாளர் நிம்மதியாக இருந்துவிடமுடியாது அது சிங்கள இராணுவத்திற்கு புதைகுழியாகவே அமையும், இவ்வாறு மேலும் இவ்வறிக்கை தெரிவிக்கிறது

## தமிழ் மாணவரை தவிர்க்கும் சிங்கள பஸ் சாரதி

(மத்துகம)

மக்கள் மயப்படுத்தப்பட்ட இ.போ.ச. பஸ் ஒன்றில் தமிழ் மாணவர்களை ஏற்ற சாரதி மறுக்கின்றாராம்.

மத்துகம பகுதியைச் சேர்ந்த குளோட்டன் தமிழ் வித்தியாலயத்தில் கல்விகற்கும் மாணவர்களுக்கே இவ்

பெறுகிறதாம் நெபொடவில் தமிழ் பிள்ளைகளைக் கண்டால் களுத்துறை என்று போடப்பட்டிருக்கும் பெயர்ப் பலகையை மாற்றி மத்துகமை என்று சாரதி போட்டு விடுகிறாராம் அதையும் மீறி தமிழ் மாணவர்கள் ஏறினால் இந்த பஸ் களுத்துறைக்குப் போவ

## இந்து ஆரம்ப பாடசாலையில் வதந்தியால் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்து ஆரம்பப் பாட

வைக்கப்பட்டுள்ளதாகவும் அது எவ்வேளையிலும் வெடிக்

## புலிகளின் தாக்குதலினால் இராணுவ அதிகாரிகள் சலனம்

(லண்டன்)

கிழக்கில் பாதுகாப்புப்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இரண்டு இடங்களில் மூன்று தடவைகள் வெவ்வேறு மோதல்கள் ஏற்பட்டதாக இராணுவத் தகவல்களை மேற்கோள் காட்டி பி.பி.ஸி. செய்தி வெளியிட்டுள்ளது

பாதுகாப்புப் படைகளுக்கும் புலிகளுக்குமிடையிலான மோதல் கடந்த வாரங்களாக

இடை நிறுத்தப்பட்ட

அதிகரித்து வருவதாக அறிய வந்துள்ளதாக பி.பி.ஸி. தெரிவிக்கின்றது.

இராணுவ அதிகாரிகளின் கூற்றுப்படி மோதலின் விளை (4 ஆம் பக்கம் பார்க்க)

அமெரிக்கா - சிறிலங்கா

## வர்த்தகர்கள் உறவை யு.எஸ். எயிட் எதிர்பார்ப்பு

இலங்கையிலுள்ள தனியார் துறையினருக்கும் அமெரிக்க வர்த்தகர்களுக்குமிடையில் உறுதியான உறவுகளை ஏற்படுத்துவதற்கானவாய்ப்புகளை யு.எஸ். எயிட் நிறுவனம்எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது.

இலங்கையிலுள்ளஅமெரிக்க தூதுவர் மரியாம்ஹெட்ஹேரல் அண்மையில் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தொழில வல்லுனர் சங்க ஒன்றியத்தின் வருடாந்த மாநாட்டில் உரையாற்றும் போது இதைத் தெரிவித்தார்.

இத்தகைய உறவுகள் தொழில்நுட்பத் தகவல்களையும் ஏனைய தொடர்புகளையும் (4 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டர் ஆசிரியர் பற்றி கொழும்பில் மாநாடு

[கொழும்பு]

அரசாங்கப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக கடமை புரிந்து இடையில் சேவையில் இருந்து நிறுத்தப்பட்ட 289 தொண்டர் ஆசிரியர்கள் பற்றி இன்று கொழும்பில் கல்வி அமைச்சில் மாநாடு ஒன்று நடாத்தப்படவுள்ளது.

இந்த ஆசிரியர்கள் தொடர்பாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பது பற்றி இந்த மாநாட்டில் முடிவு செய்யப்படும் என்று கல்விச்சேவை ஆணைக்குழு உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## கட்டைக்காடு - வெற்றிலைக்கேணி;

மறுக்கின்றாராம்.

மத்தளமை பகுதியைச் சேர்ந்த குளோடன் தமிழ் வித்தியாலயத்தில் கல்விகற்கும் மாணவர்களுக்கே இவ் அனுபவம் ஏற்பட்டுள்ளது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது. நெபொடவிலிருந்து குளோடன் வழியாக களுத்துறை நோக்கி வழமையாக செல்லும் பஸ் வண்டியிலேயே இச்சம்பவம் இடம்

பலகையை மாற்றி மத்துகமை என்று சாரதி போட்டு விடுகிறாராம் அதையும் மீறி தமிழ் மாணவர்கள் ஏறினால் இந்த பஸ் களுத்துறைக்குப் போவதிலை மத்துகமைக்கு போகிறது என்று கூறி மாணவர்களை இறக்கி விடுவாராம்.

சாரதியின் இந்த இனவாதப் போக்கில் தமிழ் மாணவர்கள் பெரிதும் அவதியுறுகின்றனராம்.

## இந்திய மீனவரால் வலைகள் திருட்டு

(கொழும்பு)

ஊர்குவும் இந்திய மீனவர்களால், மீன்பிடிவலைகள் திருடப்படுவதாக மன்னார் அரச அதிபரிடம் புகாரிடப்பட்டுள்ளது. பேசாலைக்கு அப்பாலுள்ள கடல் பகுதியில் ஊர்குவும் இந்திய மீனவர்களால் இலங்கை மீனவர்களின் வலைகள் திருடப்படுவதாகவும், சேதமாக்கப்படுவதாகவும், அரச அதிபரிடம் புகாரிடப்பட்டுள்ளது அவர் இதனைச் சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

## மேலும் 3 மோசடிக்காரர் கொழும்பில் கைது

இரகசியப் பொலிசார் எனக்கூறிக்கொண்டு பணம் பறிக்க முயன்ற மேலும் மூவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு ஜம்பட்டா தெருவிலுள்ள வீடொன்றில் தங்கியிருந்த வடபகுதியைச்சேர்ந்த தமிழர்களிடம் இரகசியப் பொலிசார் எனக்கூறி பணம் பறிக்க முயன்றபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

## பதுக்கல் சமூக விரோத செயல் மீறினால் தண்டமும் தடுப்புக்காவலும்

### காவல்துறை பொறுப்பாளர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

போர்க்காலச் சூழ்நிலையை சாட்டாக வைத்து கொள்ளை இலாபம் பெறும் நோக்கத்துடன் பொருள்களைப் பதுக்குவதும், சமூக விரோதச் செயலாகவே கருதப்படும். இவ்வாறு பொருள்களைப் பதுக்குவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு நடேசன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து திரு. நடேசன் விடுத்த அறிக்கையில்:-

தற்போதைய போர்க்கால சூழ்நிலையை சாட்டாக வைத்து கொள்ளை இலாபம் பெறும் நோக்குடன் பொது மக்களின் அத்தியாவசியப் பொருள்களில் ஒன்றான மண்ணெண்ணெயினைப் பதுக்கும் நடவடிக்கைகளில் சில வர்த்தகர்கள் மீண்டும் ஈடுபட்டுள்ளனர். விடுதலைக்காகப் போராடும் மக்கள் மீது இவ்வாறான தேவையற்ற துன்பத்தையும், துயரத்தையும் திணிக்க முயல்வது மன்னிக்க முடியாத குற்றமாகும். இதை ஓர் சமூகவிரோத செயலாகவே கருதுகின்றோம்.. இந்த போதுமான மண்ணெண்ணெய் கையிருப்பில் உள்ளது.

பொது மக்களின் அத்தியாவசியப் பொருள்களை பதுக்குவோர் மீதும, கூடியவிலையில் விற்போர் மீதும் அபராதம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வதந்தியால் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையினுள் வெடிகுண்டு ஒன்று வைக்கப்பட்டுள்ளதாக வஷமிகளால் பரப்பப்பட்ட வதந்தியைத் தொடர்ந்து நேற்று பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நேற்று அதிகாலை பாடசாலைக்கு வந்த இளைஞர் ஒருவர் காவலாளியிடம் பாடசாலையினுள் குண்டு ஒன்று வைக்கப்பட்டுள்ளதாகவும் அது எவ்வேளையிலும் வெடிக்கலாம் எனவும் கூறிச்சென்றதைத் தொடர்ந்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதனால் பெற்றோர் அவசர அவசரமாக தமது பிள்ளைகளை வீடுகளுக்கு அழைத்துச் சென்றனர். இதனைத் தொடர்ந்து கிடைத்த தகவலை அடுத்து அவ்விடத்திற்கு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கட்டைக்காடு - வெற்றிலைக்கேணி; கடலிலிருந்து பீரங்கி தாக்கு

கட்டைக்காடு வெற்றிலைக்கேணி கடற்கரைகளுக்கு அப்பால் தரித்து நிற்கும் பீரங்கிப் படகுகளில் இருந்தும், அப்பகுதியிலுள்ள சிறிலங்கா இராணுவ முகாம்களில் இருந்தும் நேற்று மாலை பலத்த எறிகணை வீச்சுக்கள் இடம் பெற்றன.

பொதுமக்கள் நெருக்கமாகக் குடியிருக்கும் குடியிருப்பு பகுதிகளை நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் இந்த எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

# பழுகாமத்தில் புலிகள் துணிகர தாக்கு

# 6 இராணுவம் பலி; பலர் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் சின்னக் காந்திபுரம் என்னும் இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற் கொண்ட துணிகர அதிரடித்தாக்குதல் ஒன்றில் ஆறிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் பலர் படுகாயமடைந்தனர் விடுதலைப் புலிகள் தரப்பில் இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர். இதேவேளை சூழவிருந்த இராணுவ முகாமவிலிருந்து உதவக்கு விரைந்த இராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தினர்.

இம் மோதல் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது; பழுகாமம் இராணுவ முகாமிலிருந்து தும்பன கேணி நோக்கிச் சென்றுகொண்டிருந்த இராணுவ அணிமீதே சின்னக் காந்திபுரத்தில் இத் துணிகர தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது. சுமார் 75 பேருக்கு மேற்பட்ட இராணுவத்தினரைக் கொண்ட இவ் இராணுவ அணியினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இருபது நிமிடங்கள் வரை இம் மோதல் இடம் பெற்றது இம் மோதலின் போதே ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் பலர் படுகாயமடைந்தனர்.

இதேவேளை இத்தாக்குதலுக்குள்ளான இராணுவ அணிக்கு உதவியாக பழுகாமம், வெள்ளாவெளி, கொக்கட்டிச்சோலை இராணுவ முகாம்களிலிருந்து கவசவாகனங்கள்சகிதம் இராணுவ அணிகள் முன்னேற முற்பட்ட போது இவ் அணிகள் மீது விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்குதலை நடத்தினர் இதில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விபரம் தெரியாது.

இம் மோதலில் இரு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற மோதலின் போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப் பட்ட ஆயுதத் தளபாடங்களின் விபரம் வருமாறு.

- ★ ரி 56-2 - 02
- ★ ரி 56 புதியது - 01
- ★ ரி 56 மகசின் - 15
- ★ ரி 81-1 - 01
- ★ ரி81- மகசின் - 04
- ★ ஐ எம். ரவைகள் - 500
- ★ ஜீ ஆர். கைக்குண்டுகள் - 03
- ★ 40 எம்.எம்-ஷெல்கள் - 06
- ★ சின்ன கிளைமோர் - 01
- ★ வயர் றோல் - 01
- ★ வெடிக்க வைக்கும் கருவி - 01
- ★ ஏ கே. ஹோல்சர் - 01
- ★ ஜக்கட் ஹோல்சர் - 02
- ★ தண்ணீர்க் கான் - 03

## இரு வேங்கைகள் வீரச்சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் சின்னக்காந்திபுரம் பகுதியில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருடன் நடைபெற்ற மோதலின் போது மேஜர் பயில்வான் (சின்னத்தம்பி சிவராசா, முனைக்காடு கொக்கட்டிச்சோலை) கப்டன் கீர்த்தி (கைலாயபிள்ளை உதயகுமார் எருவில் களுவாஞ்சிக்குடி) ஆகிய இருவரும் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## மகாராஜபுரம் சந்தானம் வீதி விபத்தில் காலமானர்

பிரபல கர்நாடக இசை மேதை மகாராஜபுரம் சந்தானம் நேற்று வீதி விபத்தொன்றில் உயிரிழந்தார். அவருடன் அவரது நண்பர் இராமநாத

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி சந்தைக்கு அருகாமையில் நன்னீர்க் கிணறு, குடியிருப்பு வசதிகளுடன் 5 பரப்புக் காணியும், சிவன் கோவில் வீதியில் 3,1/4 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு; த.வேலாயுதம், சட்டத்தரணி, ஸ்ரேசன் றோட், சாவகச்சேரி.

(2712)

**விற்பனையாகின்றன**

A/L வினாவிடை (உயர்கல்விப்பதிப்பகம் கொழும்புத்துறை) CR கொப்பிகள், 5ம் ஆண்டு கட்டுரைத்தேன்துளி 60, CHINA கொப்பிகள் மலிவு விலையில் விற்பனையாகின்றன. மண்டேலா புத்தக சாலை யாழ்ப்பாணம். அரஸ் புத்தக நிலையம் யாழ்ப்பாணம்.

[2708]

**ஓவியர் பெனடிக்ற்**

ஈழத்திருநாட்டிற்குப் புகழ் சேர்த்த ஓவியர் அமரர் பெனடிக்ற் அவர்களின் திருவுருவ ஓவியத்தை எதிர்வரும் ஜூலை 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று பிற்பகல் 3-00 மணிக்கு நல்லூர் ஆதீனத்தில் திரை நீக்கம்செய்துவைக்கவுள்ளோம்.

அமரரின் ஆர்வலர்கள், மாணாக்கர்கள், உறவினர்களை எம்முடன் உடன்தொடர்புகொள்ள வேண்டுகிறோம்.

— மில்க்வைற் யாழ்ப்பாணம்.

(சி/4593)

## நோய்தடுப்பு அறிவுரைகள் தமிழில் இல்லை

அண்மையில் இராகலை கடைவீதி பஸ் நிலையம் மற்றும் பொது இடங்களிலெல்லாம் வாகனத்தில் ஒலிபெருக்கி மூலம் பொது சுகாதார சேவை அதிகாரிகளால் பல நோய்த்தடுப்பு அறிவுரைகள் சிங்களத்தில் மாத்திரமே அறிவிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில்பெரும்பான்மையாக தமிழர்களே வசித்து வருகின்ற போதிலும் அவர்களுக்காக தமிழில்ஒலிபெருக்கி மூலம் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

சிங்களத்தில் மட்டும் ஒலிபரப்பப்பட்ட நோய் தடுப்பு அறிவுரைகள் தமிழ் பேசும் மக்களுக்கு என்னவென்று

### தோட்டத் தொழிலாளரது

# விவசாய காணிகள் சுவீகரிப்பு; தொழிற் சங்கம் கண்டனம்

[தலவாக்கொல்லை]

"கடந்த பதினைந்து இருபது வருட காலமாகத் தோட்டத் தொழிலாளர்கள் செய்து வரும் காணிகளை இப்போது அனுமதி பெறாமல் விவசாயத்தில் ஈடுபட்டிருப்பதாகக் குற்றஞ் சாட்டி அக்காணிகளை வரும் 30 ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்க வேண்டுமென்று தலவாக்கொல்லைப் பகுதியிலுள்ள பல தோட்ட நிருவாகங்கள் பத்தொன்பது பேருக்கு நோட்டீஸ் கொடுத்துள்ளது இது தொழிலாளர்களை வஞ்சிக்கும் ஓர் நடவடிக்கையாகும். இதை தோட்டத் தொழிலாளர்கள் ஆட்சேபிக்க வேண்டும்."

இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத் தலைவர் டி. அய்யாத்துரை தெரிவித்துள்ளார் இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்:

தோட்டங்களில் தரிசாகக் கிடக்கும் காணிகளைத் தோட்டத் தொழிலாளர்கள் விவசாயம் செய்ய அனுமதிக்க வேண்டுமெனக் கோரும் அதே வேளையிலும், காலம் காலமாக விவசாயம் செய்து வரும் காணியை திரும்பஒப்படைக்க வேண்டுமெனக் கூறுவது வேடிக்கையும் அதே சமயம் வேதனையுமான செயலாகும். அது மாத்திரமல்ல, இது இனப்பாகுபாடு அடிப்படையில் எடுக்கப்பட்டு வரும் ஒரு நடவடிக்கையாகும்.

பதினைந்து -இருபது வருட காலமாக இக் காணிகளில் தொழிலாளி விவசாயம் செய்து வந்ததை தோட்ட நிர்வாகம் அனுமதித்தே வந்துள்ளது. இப்போது திடீரென இக் காணியை திருப்பி ஒப்படைக்குமாறு உத்தரவிடுவதன் நோக்கத்தை சீர்தூக்கிப் பார்த்தால் அதன் உண்மை புரியும்.

ஆகவே இன்று தலவாக்கொல்லையில் இதை ஏற்றுக் கொண்டால் நாளை ஏனைய பகுதிகளிலும் இத்திட்டத்தை அமுல்படுத்தலாம்.

தோட்டத் தொழிலாளர் இதை ஓர் திட்டமிட்டு வஞ்சிக்கும் செயலாகக் கருதி தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கையாகக் கருதி சகல தொழிலாளர்களும் இதை எதிர்த்து மாபெரும் போராட்டத்தில் குதிக்கவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பனைவளப்பயிற்சிநிலையம்

பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தினால் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் வடமராட்சி ஸ்ரீபுரத்தில் ஆரம்பிக்கப்பட்ட பனைவளப் பயிற்சி நிலையத்தில் இதுவரை 68 பயிற்சியாளர்கள் பயிற்சியினை முடித்து வெளியேறியுள்ளனர். இதுவரை இரண்டு கட்டப் பயிற்சி நெறிகள் நடந்து முடிந்துள்ளன. கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்ட மூன்றாவது கட்டப் பயிற்சி நெறியில் 11 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இரண்டாவது கட்டப் பயிற்சி மாணவர்களில் செல்வன். கு தேவதாஸ் 1,270 போத்தல்கள் பதனீரைகடந்த மாதம் உற்பத்தி செய்து 6 350/- ரூபாவையும், செல்வன் வி. ராஜேஸ்கண்ணன் 1 076 போத்தல்கள் பதனீரை உற்பத்தி செய்து 5 350/-ரூபாவையும் வருமானமாகப் பெற்றுள்ளனர்.

பனைவளப் பயிற்சி நிலையத்தில் பனைத் தொழில் சம்பந்தமான பயிற்சிகள் மூன்று மாத காலத்திற்கு வழங்கப்பட்டு வருகின்றன. தமிழீழத்தின் தேசிய வளமான பனை வளத்தினை தகுந்த முறையில் பயன்படுத்துவதற்காக, பனைத் தொழில் வல்லுனர்களை உருவாக்கும் நோக்கில் இவப்பயிற்சிகள் நடத்தப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

### ராஜீவ் கொலை தொடர்பாக

## இந்திய உயர் குழு இலங்கை வரவுள்ளது

இந்திய உயர் குழுவொன்று இவ்வாரத்தில் கொழும்பு வரவுள்ளது என்று தினகரன் செய்தி வெளியிட்டுள்ளது. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தொடர்புபடுத்தப்பட்டுள்ள தலைவர் பிரபாகரனையும், பொட்டு அம்மானையும் இந்தியாவிடம் ஒப்படைக்கும்படி சிறிலங்கா அரசை உத்தியோகபூர்வமாகக் கோரும் பொருட்டு இக்குழுவினர் கொழும்பு வரவிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

### நூலகசேவை ஆரம்பம்

(கொழும்புத்துறை)

யாழ் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களின் உடலியல், உளவியல் நலன்கருதி நடமாடும் நூலகசேவை நோயாளர் நலன்புரிச் சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

இந்நூலக சேவைக்குத் தேவைபபடும் நூல்கள், விதைகள், நாவல்கள், வெளியீடுகள் சஞ்சிகைகள், சமய நூல்கள் போன்றவற்றை நலன்புரிச்சங்கத்துக்குஅன்பளிப்பாகத்தந்து உதவுமாறு சங்கச் செயலாளர் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

### ஜனசவிய திட்டம்

## தோட்டத் தொழிலாளருக்கு நன்மை அளிக்கவில்லை

(மஸ்கெலியா)

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஜனசவிய உதவித் திட்டத்தின் மூலம் போதுமான நன்மைகிடைக்கவில்லை உதவி தேவைப்பட்ட எல்லோருக்கும் இது கிடைக்காமல் கஷ்டப்பட்டார்கள் அத்துடன் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இலவச கூப்பனும் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் வருமானம் இல்லாத தொழிலாளர்கள்மேலும் கஷ்டத்துக்குள்ளாகிறார்கள்.

இவ்வாறுஇலங்கைத்தோட்ட தொழிலாளர் செங்கொடிச் சங்கத்தின் மஸ்கெலிய கிளை செயலர் செல்லையா சிவசுந்தரம் அம்பகமுவ உதவி அரச அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அவர் தமது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது 'மலையகத்தில் தொழிலாளர்களில் மிகச் சிலருக்கே இலவசக் கூப்பன் வழங்கப்பட்டுள்ளது. அவர்களின் ஜனசவிய உதவித் திட்டமும் குறைவாகவே கிடைத்தது. இபபோது இந்த இரண்டும் நிறுத்தப் பட்டுவிட்டதால் விலைவாசி உயர்வால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். மே மாதத்தில் இருநது நிறுத்தப்பட்டுள்ள இந்த உதவித் திட்டத்தை மீண்டும் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

### முச்சக்கரவண்டி அன்பளிப்பு

(தெல்லிபபழை)

குரும்பசிட்டிக் கிராமத்தைச் சேர்ந்த பிறபபிலேயே ஊனமுற்ற, வறிய குடும்பத்தைச் சேர்ந்த சிவரத்தினம் இரவீந்திரன் என்ற 18 வயது இளைஞருக்கு குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் முச்சக்கர வண்டியொன்றினை அன்பளிப்பாக வழங்கினர்.

### றிச்சார்ட் டீ. சொய்சா கொலைவழக்கு

## விசாரணை முன்உதாரணம 'ஆசியா வாச்' கருத்து

(கொழும்பு)

பத்திரிகையாளர் றிச்சேட் டி செய்ஸா கொலை வழக்கு எவரின் தலையீடுமின்றிச் சுதந்திரமாக நடைபெறுகிறதா என்பதை அவதானிக்கும் ஒரு பரீட்சார்த்த வழக்காக சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கருதுவதாக ஏசியா வாச் சிறிலங்கா பற்றிய அதனறிக்கையில் தெரிவித்துள்ளது.

வாஷிங்டனில் மையப் பணி

வழக்கில் தலையிட்ட சட்டத்தரணி ஜெனரல் அலுவலகம் பொலீஸ் அதிகாரி குணசிங்காவைக் கைதுசெய்யப் போதிய ஆதாரம் இல்லை எனத் தெரிவித்திருந்தது.

பொலிசார் மீது புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை யிற்று. திரு. குணசிங்காவைப் பாதுகாப்பதற்காகவே பொலிஸ் திணைக்களம் செயற்படுவதாக டாக்டர் சரவணமுத்து குற்றஞ் சாட்டியுள்ளார்.

இதேவேளை குணசிங்கா

## மேஜர் முரளி நினைவுநாள் புதிர்ப்போட்டி - 1992

### நேரசூசிகை

| திகதி, நேரம் | | கொத்தணி | போட்டி நடைபெறும் பாடசாலை |
|---|---|---|---|
| 25-06-92 | | | |
| காலை | 9 30 | அச்சுவேலி | அச்சுவேலி மகா வித்தியாலயம். |
| | 11.30 | புத்தூர் | நடராஜா ராமலிங்க வித். |
| | 9.30 | காரைநகர் | விக்ரோறியாக் கல்லூரி. |
| | 11 30 | சுழிபுரம் | விக்ரோறியாக் கல்லூரி. |
| | 9 30 | யாழ்நகர் | யாழ் மத்திய கல்லூரி |
| | 11 30 | யாழ்நகர் | தெறகு செ. சாள்ஸ் மகாவித். |
| | 9 30 | பருத்தித்துறை | ஹாட்லிக் கல்லூரி |
| | 11 30 | புலோலி | வேலாயுதம் மகா வித்தியாலயம். |
| | 9 0 | சாவ/நகர் | றிபேக் கல்லூரி. |
| | 11.30 | சாவ/வடநகர் | சாவ இந்துக்கல்லூரி. |
| | 9.30 | புங்குடுதீவு | கந்தர்மடம் யூனிவேர்சல் கல்வி நிலையம். |
| பி. ப. | 1.30 | வேலணை | கொட்டடி நமசிவாய வித். |
| 26.06.92 | | | |
| காலை | 9.30 | நீர்வேலி | நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி |
| | 11.00 | கோப்பாய் | கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரி |
| | 9 30 | வட்டுக்கோட்டை | வட்டு இந்துக் கல்லூரி |
| | 11 30 | பண்டத்தரிப்பு | பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி |
| | 9 30 | வண்ணார்பண்ணை தெற்கு | வைத்தீஸ்வரா கல். |
| | 11.30 | வண்ணார்பண்ணை வடக்கு | யாழ். இந்து மகளிர் கல்லூரி |
| | 9 30 | நெல்லியடி | நெல்லியடி மகா வித்தியாலயம் |
| | 11 30 | கரவெட்டி | விக்னேஸ்வராக் கல்லூரி |
| | 9.00 | மட்டுவில் | மட்டுவில் மகா வித்தியாலயம் |
| | 11 30 | கைதடி | முத்துக்குமாரசாமி மகா வித்தி. |
| | 9 30 | மண்டைதீவு | நியூ மாஸ்ரர் கல்வி நிலையம் |
| பி.ப | 1 30 | ஊர்காவற்றுறை | சென் ஜேம்ஸ் அக்கடமி |
| 29 - 06 - 92 | | | |
| காலை | 9 30 | மானிப்பாய் | மானிப்பாய் இந்துக்கல்லூரி |
| | 11 30 | நவாலி | நவாலி மகாவித்தியாலயம் |
| | 9 30 | இளவாலை | பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி |
| | 11.30 | அம்பனை | அருணோதயாக் கல்லூரி |
| பி.ப. | 1.00 | அளவெட்டி | ,, ,, |
| காலை | 8 30 | நல்லூர் | கனகரத்தினம்மகாவித்தியாலயம் |
| | 10 30 | கொக்குவில் | கொக்குவில் இந்துக்கல்லூரி |
| பி ப. | 1.00 | கோண்டாவில் | கோண்டாவில ராமகிருஷ்ணா ம. வி. |
| காலை | 9 30 | உடுப்பிட்டி | உடுப்பிட்டி அ மி கல்லூரி |
| | 11.30 | வல்வெட்டித்துறை | சிதம்பராக்கல்லூரி |
| | 11 30 | கொடிகாமம் | திருநாவுக்கரசு வித்தியாலயம் |
| | 2 00 | வரணி | வரணி மகாவித்தியாலம் |
| பி.ப. | 9 00 | உசன் | உசன் மகா வித்தியாலயம் |
| 30. 06. 92 | | | |
| காலை | 9.30 | உடுவில் | இராமநாதன் கல்லூரி |
| | 11 30 | சுன்னாகம் | ஸ்கந்தவரோதயாக் கல்லூரி |
| பி.ப. | 1 00 | ஏழாலை | ஏழாலை மகா வித்தியாலயம் |
| காலை | 9 30 | காங்கேசன்துறை | நடேஸ்வரக் கல்லூரி |
| | 11.30 | தெல்லிப்பழை | யூனியன் கல்லூரி |
| பி.ப. | 1 00 | மல்லாகம் | மல்லாகம் மகா வித்தியாலயம் |
| காலை | 9 30 | உடுத்துறை | உடுத்துறை மகாவித்தியாலயம் |
| | 11.30 | நாகர்கோவில் | நாகர்கோவில் மகா வித்தி. |
| 01. 07. 92 | | | |
| காலை | 9 30 | உரும்பிராய் | உரும்பிராய் இந்துக் கல்லூரி |
| | 11 30 | வசாவிளான் | வசாவிளான் மத்திய மகா வி. |

## ஆகஸ்ட்முதலாம்திகதிமுதல் க.பொ.த (உயர்தரம்)பரீட்சை

(கொழும்பு)

க. பொ. த உயர்தர பரீட்சை வரும் ஆகஸ்ட் முதலாம் திகதி ஆரம்பமாகி அதே மாதம் 25ஆம் திகதி முடிவடையவுள்ளது.

மொத்தம் 1,55,000 விண்ணப்பதாரிகளின் 1,00 000 பேர் பாடசாலைகள் மூலம் தோற்றும் பரீட்சார்த்திகள் என்று பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றன

பரப்பப்பட்ட நோய் தடுப்பு அறிவுரைகள் தமிழ் பேசும் மக்களுக்கு என்னவென்று புரியவில்லை.

தமிழர்களுக்கு மட்டும் நோய் வராதா? தமிழ் மொழியிலும் அறிவித்தால் என்ன? என்று பொதுமக்கள் பலர் கவலை அடைந்துள்ளனர்.

## வெள்ளிவிழா

(யாழ்ப்பாணம்)

கைதடி நவீல்ட்செவிப்புலன் இழந்தோர் பாடசாலையின் பழைய மாணவர்சங்கத்தின் வெள்ளிவிழா எதிர்வரும்சனிக்கிழமை கைதடி நவீல்ட்செவிப்புலன் இழந்தோர் பாடசாலையில் நடைபெற உள்ளது.

## மாவீரர் நினைவாக விளையாட்டுப் போட்டி

மாவீரர்கள் நினைவாக புலோலி மாலாவத்தையில் விளையாட்டுப் போட்டியும், நினைவஞ்சலிக் கூட்டமும் இன்று பிற்பகல் 2 00மணிக்கு நடைபெறவுள்ளது.

2-ம்லெப்டினன்ட் வைதேகி, ரதிஸ், றோகான் ஆகிய மாவீரர்கள் நினைவாக வைதேகி பாலர் பாடசாலையில் மேற்படி நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இதில் விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் பலர் கலந்து கொள்வர். (82)

## தென்னாசிய பொருளாதார அமைப்பு

(கொழும்பு)

தென்னாசிய பொருளாதார அமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென அமைச்சர் மன்சூர் கோரிக்கை விடுத்துள்ளார். அவர் மேலும் கூறுகையில் முன்னேறிய பொருளாதார அமைப்பு ஒன்றை நிறுவவேண்டும் என்ற உறுதி இருக்குமாயின் அதை அடைவதில் சிரமம் இருக்காது எனவும் தெரிவித்தார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தொடர்புபடுத்தப்பட்டுள்ள தலைவர் பிரபாகரனை பொருட்டு இக்குழுவினர் கொழும்பு வரவிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

தமிழகத்திலிருந்து திரும்பிய

## அகதி இளைஞர் ஒருவர் மகஸீன் சிறைச்சாலையில்

(வவுனியா)

தமிழகத்திலிருந்து வந்த இளைஞர் ஒருவர் மகஸீன் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

இராணுவ நடவடிக்கைக்கு அஞ்சி தமிழக அகதிமுகாம் ஒன்றில் தஞ்சமடைந்திருந்த பிரஸ்தாப இளைஞர் கடந்த ஏப்ரல் மாதம் வவுனியா வந்து தாண்டிக்குளம் அகதிமுகாமில் இருந்தபோது பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

இவர் சமீபத்தில் மகஸீன் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டு அங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

க. நவநீதன் என்ற இளைஞரே இவ்வாறு தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

இவர் 90 ஆம் ஆண்டின்முற்பகுதியில் வவுனியா பிரதம தபாலகத்தில் சிற்றூழியராக பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

## சுதந்திர வர்த்தக வலயம் தீவிர கண்காணிப்பின் கீழ்

(கொழும்பு)

சுதந்திர வர்த்தக வலயத்தில் இருக்கும் ஆடை உற்பத்திச் சாலைகள் மீது தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளது. பொலிசாரும் சுங்க அதிகாரிகளும் கூட்டாக இணைந்து கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

அண்மைக்காலமாகசுதந்திர வர்த்தக வலயத்தின்தொழிற்சாலைகளில் இருந்து பெருந்தொகையான புடைவை வகைகள் கடத்தப்பட்டு கொழும்பு புடைவை வர்த்தக சந்தைக்கு வருவது அதிகரித்து வருவதாகவும் இது உள்ளூர் புடைவை உற்பத்தியாளர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருவதாக சுங்கத்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை மேற்படி தொழிற்சாலையிலிருந்து கடத்தப்பட்ட சுமார் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான புடைவை வகைகளை சீதுவையில் உள்ள வீடொன்றில் இருந்து பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தொழிற்சாலையின் களஞ்சிய உதவிப்பொறுப்பாளர் ஒருவர், எழுதுவினைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு சுங்க அதிகாரிகள்முன் ஆஜர்செய்யப்பட்டார்.

விசாரணை நடத்திய சுங்கப்பணியகளர் சந்தேக நபர்களுக்கு தலா ஒருலட்சம் அபராதமும் புடைவைவகைகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன

இக்கடத்தலுக்குசூத்திரதாரி என சந்தேகிக்கப்படும் வெளிநாட்டவரானபொது முகாமையாளர் ஒருவரின் நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகள் விழிப்பாக கண்காணித்து வருகின்றனர்.

இதனைத்தொடர்ந்துகொழும்பு பெரும்பாக பிரிவு பிரதிப் பொலிஸ்மா அதிபர். சுங்கப் பணிப்பாளர் ஆகியோரின்வழி நடத்தலின் கீழ் பொலிஸ் சுங்க அதிகாரிகள்குழு இக்கடத்தலை தடுப்பதற்குபுதிய திட்டங்கள் வகுத்து வருகிறது.

வித்துள்ளது.

வாஷிங்டனில் மையப் பணியகத்தைக் கொண்ட இவ் அமைப்பு அண்மையில் வெளியிட்ட அறிக்கையொன்றுல் இவ் வழக்கின் பின்னணி பற்றி விபரித்திருப்பதுடன், இவ் வழக்கில் ஏற்படும் முன்னேற்றங்கள் குறிப்பிடத்தக்கவையாக இருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளது.

தமது மகனை பெப். 1990ல் கடத்திச் சென்ற ஆயுததாரிகளில் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியான றொனி குணசிங்காவும் இருந்ததாக றிச்சர்ட் டீ சொய்ஸ வின் தாயாரான திருமதி மனோராணி சரவணமுத்து குற்றஞ்சாட்டியுள்ளமை தெரிந்ததே.

ஜூன் 1990இல் மாஜிஸ்திரேட் நீதமன்றம் ஒன்று சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரியை கைது செய்து நீதிமன்றத்தின் முன் நிறுத்துமாறு உத்தவிட்டபோதும பொலீசார் அதனை நிறைவேற்றவில்லை. இந்நிலையில் வழக்கு ஜூலை 1990வரை ஒத்திவைக்கபட்டது மாஜிஸ்திரேட்டின் வேண்டுகோளுக்கிணங்க இவ்

...டர் சரவணமுத்து குற்றஞ் சாட்டியுள்ளார்.

இதேவேளை குணசிங்காவும், அவருடன் குற்றஞ் சாட்டப்பட்ட இன்னுமொரு பொலிஸ் அதிகாரியும் டாக்டர் திருமதி சரவணமுத்துவிற்கு எதிராக மானநஷ்ட வழக்கு தாக்கல் செய்தார். சுதந்திரமான புலனாய்வுகள் மேற்கொள்ளப்படுவது தடுக்கப்பட்டது.

ஜூலை 1992இல் டாக்டர் திருமதி சரவணமுத்து உயர் நீதிமன்றத்தில தாக்கலசெய்த மனுவொன்றில் தமது மகன் கடத்தப்பட்டது தொடர்பான நேரடிச் சாட்சியங்களை பதிவு செய்த பொலிசார் அவற்றை மீளத்தர மறுப்பதாகவும், இதனால் தமது அடிப்படை உரிமைகள் மறுப்பதாக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

மார்ச்27,1992இல் இம் மனு மீது தீர்ப்பளித்த உயர்நீதிமன்றம் டாக்டர் திருமதி சரவணமுத்துவிற்கு ரூபா 10.000 நஷ்டஈடாக வழங்கும்படி தீர்ப்பளித்துள்ளது தெரிந்ததே:

---

### சன்மார்க்கசபை - குரும்பசிட்டி

### இடம்பெயர்ந்த குரும்பசிட்டி மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள்

## இலவச விநியோகம்

1990 ஆனிமாதம் ஆரம்பமான இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த குரும்பசிட்டி, குரும்பசிட்டி கிழக்கு கிராமசபை அலுவலர் பிரிவுகளை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட குடும்பங்களில் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு இலவசமாகப் பாடசாலை உபகரணங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் பயன்பெற தகுதி பெற்றவர்கள் இம் மாதம் 27ஆம், 28ஆம் திகதிகளில் சபையின் தற்காலிக அலுவலகம் இயங்கும் மயிலணிவீதி, சுன்னாகத்தில் பிற்பகல் 3 — 5 மணி வரை தொடர்பு கொள்ளவும்.

க. விஸ்வநாதன்
பிரசார செயலாளர்

[2715]

---

25ஆம் திகதி முடிவடையவுள்ளது என்று பரீட்சைத் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன

---

## நினைவு கூருகின்றோம்...
## 1992-06-25

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ் கரவெட்டியில் எதிர்பாராதவிதமாக கைக்குண்டு வெடித்ததில் எம்மைப் பிரிந்த -

**ரமேஸ்** (பாலசுப்பிரமணியம் செல்வராஜா - 'செல்வ மணிநிலையம்', கரணவாய் கிழக்கு, கரவெட்டி )

1986 ஆம் ஆண்டு திருக்கோணமலை தம்பலகாமம் பகுதிக் காட்டினுள் இருந்து சடலங்களாக மீட்கப்பட்ட பெண் உட்பட 34 தமிழர்கள்.

1987 ஆம் ஆண்டு வலையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். விஜி** (பொன்னுத்துரை ஏகாம்பரம் - கீழன் வீதி, மட்டுவில் வடக்கு.)

1989 ஆம் ஆண்டு மட்டக்களப்பு கல்லடிப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் கொலை செய்யப்பட்ட -

**சர்வதன்** (இளையதம்பி மகேந்திரன் - ஆரையம்பதி 03, மட்டக்களப்பு.)

1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில வீரச்சாவெய்திய -

**ஜாக்கி** (ஜெயசுந்தரம் கெங்காதரன் - சோடாக்கடையடி, மயிலியதனை, வல்வெட்டித்துறை )

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டு பின், கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட புதுமுகத்துவாரத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்' சம்மாந்துறைப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 85 தமிழர்கள்.

திருக்கோணமலை கவாட்டிக் குடாப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட 3 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையில் கொல்லப்பட்ட பெரியபுல்லுமலையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

### ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

### தமிழீழ விடுதலைப் புலிகள்

(இ/4592)

### சிந்தனைக்கு

நம்மோடு மற்போர் செய்பவர்,
நம் நரம்புகளைப் பலப்படுத்தி நம்
திறமையைக் கூராக்குகிறார் நம் எதிராளியே
நமக்குத்துணைவர்.

— எட்மண்ட் பர்க்

ஈழநாதம்

81, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 25-06-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2808
த. பெ. எண் 33

## தமிழ் மக்கள் போராட தயாராக வேண்டும்

யாழ். குடா நாட்டில் பெரும் தாக்குதல்களை மேற்கொள்ள சிறிலங்கா இராணுவம் பெரும் முஸ்தீபு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிகிறது. இத் தாக்குதல் நடவடிக்கைகள் ஒரு முனையில் அல்லது ஒரே நேரத்தில் பல முனைகளில் இடம் பெறலாம் எனவும் அறிய வருகின்றது. இத் தாக்குதல் நடவடிக்கைகளுக்காக பெருமளவு இராணுவத்தினரும், டாங்கிகள் கவசவாகனங்கள் உட்பட பெரும் இராணுவத் தளபாடங்களும் வடபகுதியில் குவிக்கப்பட்டும் வருகின்றன.

சிங்களப் பேரினவாத சக்திகள் இதுவரை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் எனத் தெரிவித்து வந்திருப்பினும் இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியான தீர்வு ஏற்படுவதற்கு ஒரு இம்மியளவு தானும் விட்டுக்கொடுப்பு செய்யத் தயாராக இருக்கவில்லை. தமிழ் மக்களினால் நிராகரிக்கப்பட்ட தமிழ் குழுக்களின் மிகக் குறைந்த தீர்வுத்திட்டத்தைத் தானும் சிங்களப்பேரினவாதம் ஏற்றுக்கொள்ளாத அளவிற்கு பேரினவாதிகளின் ஆதிக்க வெறியுள்ளது.

இதேவேளை இனப்பிரச்சினை தீர்விற்கு தமிழ் குழுக்களே விட்டுக் கொடுப்புச் செய்யவேண்டும் என சிங்கள பேரினவாதிகள் குரல் எழுப்புகின்றனர். "தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்ற ரீதியில் தமிழ் கட்சிகள் செயற்பட்டால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் சிரமம் ஏற்படும். எனவே தமிழ்க்கட்சிகள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் கூடிய கவனம் செலுத்தவேண்டும்" என சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம்.பி இரத்நாயக்கா தெரிவித்துள்ளார். இது சிறிலங்கா ஜனாதிபதி இனப்பிரச்சினைத்தீர்வு ஏற்படுவதானவைப்பு குறித்து தமிழ்க்கட்சிகளுக்கு தெரிவித்த கருத்தின் மறுவடிவமாகும் "சிங்களவர்களும் முஸ்லிம்களும் ஏற்புடைய தீர்வுதிட்டம் ஒன்றை தமிழ் குழுக்கள் முன்வைக்க வேண்டும்" என சிறிலங்கா ஜனாதிபதி தெரிவித்திருந்தார். பேரினவாதிகளின் இக்கோரிக்கைக்குச் செவிசாய்ப்பதனால் தமிழ்மக்கள் எதை விட்டுக் கொடுப்பது? சிங்கள பேரினவாதிகளின் ஆக்கிரமிப்பிற்குத் தமிழர் தாயகத்தை விட்டுக் கொடுப்பதா...

# அமெரிக்க கறுப்பர்களை ஒடுக்க வரலாற்றில் போடப்பட்ட திட்டங்கள்

## இவை ஒரு தற்செயலான நிகழ்ச்சியல்ல

கறுப்பின மக்களுக்கு எதிரான இனப்படுகொலைத் திட்டம் ஒன்றை பற்றி கூறினவுடன் அமெரிக்க வெள்ளையர்கள் தாம் எப்பொழுதும் நியாயத்துக்குக் கட்டுப்படுபவர்கள் போல அப்படி ஒன்றை நம்ப முடியுமா என்ற விதத்தில் ஒப்புக்கொள்ள மறுப்பது வழமையாகவுள்ளது. உடனடியாக நேர்முகமாக மறுப்பைத் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள் 1950இல் கறுப்பினத்தவர்களை வெள்ளையர் அழிப்பதாகக் காட்டும் ஒரு படம் எடுக்கப்பட்டது. அதன் ஒரு காட்சியில் கொடூரமான வழிகளைக் கொண்ட ஐந்து வெள்ளைக் காடையர்கள் ஆய்வு கூடங்களில் அணியப்படும் வெள்ளை மேலங்கிகளில் தோன்றி கறுப்பின மக்களை அழிக்க முயற்சி செய்வதைக் காட்டுகிறது. இந்தக்காட்சி கறுப்பின மக்களிடையே ஏற்படுத்திய குரோதத்தைச் சிறுபிள்ளைத்தனமானது எனக் கூறி கறுப்பினமக்களைக் கொல்ல எடுக்கும் தங்கள் முயற்சியை வெள்ளையர்கள் மறுக்கிறார்கள். கறுப்பினத்தவரின் போராட்டம் நியாயமானதென்றும் அனால் மடைமைத்தனமானதென்றும் கூறுகிறார்கள். ஆனால் உண்மையில் தங்கள் நியாயத்துக்குக் கட்டுப்பட்டவர்களென்று கூறிக்கொண்டு மறுபக்கத்தில் கறுப்பின மக்களை அழிக்கக் கூடிய திட்டங்களை அவர்கள் உருவாக்குகிறார்கள். எந்த யார் கூறுவதுபோல கறுப்பினத்தவர்கள் எப்பொழுதும் பிழையாக இருப்பார்கள் என்று கூறமுடியாது. சில கறுப்பினத்தவர்கள் தங்களைக் கொல்ல ஒரு இரகசிய வெள்ளையர் கூட்டம் எத்தனிக்கிறது என்று கருதுவார்களேயானால் அதற்குச் சில காரணங்கள் இருக்கத்தான் வேண்டும்.

அமெரிக்க நாடு உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து அதன் யாப்பு எழுதப்பட்டதிலிருந்து, அதிகாரத்தில் இருந்த அமெரிக்கர்கள் வேறு நிறத்தையுடைய மக்களுக்கு குறைந்த அந்தஸ்து கொடுக்கும் சட்டங்களைக் கொண்டு வராதிருப்பின், அத்துடன் அமெரிக்காவின் விஞ்ஞானம், ஆத்மீகம், தத்துவம் ஆகியன கறுப்பு நிறத்தவரை அடிமைகளாக இருப்பதற்கு தகுதியில்லாதவர்கள் என நிரூபித்து அவர்கள், தங்கள் பாவங்களுக்கும் இழிவுகளுக்கும் தாங்களே பரிகாரம் தேடி முன்னேற்றம் காண வழி சமைத்திருந்தால் இவ்வினப்படுகொலைத் திட்டங்களைப்பற்றி எவரும் பயப்படத் தேவையில்லை. ஆனால் மேற்படி நடவடிக்கைகள் ...

தெரிகிறது. அடிமை வியாபாரத்தை ஆராயும் வரலாற்று ஆசிரியரான பெசில் டேவிட்சன் அவர்கள் கப்பலில் குறைந்தது ஒன்றரை மில்லியன் அடிமைகள் இறந்தனர் என்றும், ஆபிரிக்காவின் உட்பகுதியில் இருந்து அமெரிக்கா வந்தடையும் வரை பல மில்லியன் அடிமைகள் இறந்தனர் என்றும் கூறுகிறார். அதன் பின்னரும் அவர்கள் ஓருதிசை நோக்கி நடைய வேண்டிய இடங்களிலும் அபாயத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. 'புதிய நீக்ரோ இனத்தவர் ஒருவரை அவரின் பிடிவாதம், அவரின் ஆன்மீகப் பெருமை போன்ற குணங்களில் இருந்து விடுபடச் செய்யவேண்டுமாயின் ஒரு வேட்டை நாயை பழக்கி எடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளிலும் பார்க்க கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய அவசியம் இருந்தது' என்று 17 ஆம் நூற்றாண்டில் பல பிரயாணங்களை மேற்கொண்ட ஒருவர் எழுதியுள்ளாரென மெறன் பென்ற்றினுடைய பிஃபோர் த மே புவலர் என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது "அவர்களின் கடும்முயற்சி ஆச்சரியத்தைக் கொடுக்கும்.... அவர்களை வெற்றிகொள்வதற்கு முன்னரே பெரும்பாலும் அவர்கள் இறப்பது உண்டு" என்று இந்நூல் கூறுகிறது.

நீக்கிரோக்களின் பிரச்சினை உருவாக்கப்பட்ட பின் அதைத் தீர்த்துவைக்க ஒன்றுக்குப் பின் ஒன்றாக பல திட்டங்களை அமெரிக்க வெள்ளையர்கள் கொண்டு வந்தனர். வட பிராந்தியத்தில் உள்ள செல்வாக்குமிக்க வெள்ளையர்கள் சுதந்திரமான கறுப்பின அமெரிக்கர்களை கொல்லது அவர்களை ஆபிரிக்காவில் ஓர் இடத்தில் குடியேற்றுவதற்கு அமெரிக்க குடியேற்றக் கழகம் என்ற அமைப்பை 1816 இல் உருவாக்கினார்கள் கறுப்பின மக்கள் மனித இனத்துக்கு கீழ் நிலைப்பட்டவர்கள் என்ற மாயையை சுதந்திர கறுப்பின அமெரிக்கர்கள் வெற்றிகரமாக பொய்ப்பித்து வருவதை அறிந்த தென் பிராந்தியவெள்ளையர்களும் இவ்வமைப்பில் சேர்ந்தார்கள். பிலடெல்பியாவின் கறுப்பர்களின் வரலாற்றைக் ...

...றியும், எமக்கிழைக்கப்படும் தவறுகளையும் உணர்ந்துமுள்ள நாங்கள் எமது சகோதரர்களாகிய இந்நாட்டு அடிமைகளை விடுமனதார பிரியமாட்டோம்" என்று தீர்மானித்தனர்.

உள்நாட்டுப் போரின் பின் அரசியல் யாப்பிற்குக்கொண்டு வரப்பட்ட 14வது திருத்தம் கறுப்பின அமெரிக்கர்களுக்கு முழு குடியுரிமையைப் பெறும் உரிமையைக் கொடுத்தது. இதற்கு முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் தென்மாநில அரசுகள் இத்திருத்தத்தைச் செயலிழக்கச் செய்வதற்குத் தேவையான சட்டங்களை உருவாக்குவதற்கான வழிமுறைகளைக் கையாண்டனர். பிலெசி எதிர் பேகுசன் என்ற மோசமானது எனபுகழ்பெற்ற

> அமெரிக்க நியூஸ் வீக் சஞ்சிகையில் 06-04-92 இதழில் வெளியான கட்டுரையின் மொழியாக்கம் இது. இதனால் ஆபிரிக்காக் கண்டத்திலிருந்து அடிமைகளாக கொண்டுசெல்லப்பட்ட கறுப்பர்கள் மீது வெள்ளையர்களின் அடக்குமுறைக்கரங்கள் வரலாற்றுரீதியாக செயற்படுவது துல்லியமாகதுலக்கமாகிறது.

வழக்கில் 1896இல் அமெரிக்க மேல் நீதிமன்றம், "பிரிப்பானது ஆனால் சமமானது" என்ற தீர்ப்பின் மூலம் மாநில அரசுகளுக்குத் தனது ஆதரவை நல்கியது.

ஜிம் குறோவினால் கொண்டு வரப்பட்ட தேர்தல் வரிகள் வெள்ளையர்களின் வாக்குத் தகைமைகளை சீர்திருத்தம்' செய்வதென்ற போர்வையில் சொத்துக்கள் கல்வித்தகைமைகளில் நிபந்தனைகளை ஏற்படுத்தியதின் மூலம் கறுப்பின மக்களின் வாக்குரிமையில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியது என்று வரலாற்று ஆசிரி...

இவற்றைத் தொடர்ந்து, பொதுவாழ்க்கையில் பிரித்து வைக்கப்படுதல் மற்றும்இழிவுபடுத்தல் ஆகியவற்றுடன் தனிமைப்படுத்தும் சட்டத் தொகுப்புகள் கொண்டு வரப்பட்டன. பிரித்துவைப்பதற்கு பெரிய விடயம் சிறிய விடயமென்றிருக்காது நீராடும் இடங்கள், குளிர்ப்பதற்கு வாளியைப் பெறும் இடங்கள் கழிவு கூடங்கள், திடல்கள், நீதிமன்றங்கள், திரை அரங்குகள், விளையாடும் பூங்காக்கள், பாடசாலைகள், காட்சிக் கொட்டகைகள் மற்றும் சிறப்பிரதேசங்கள் யாவற்றிலும் கறுப்பின மக்கள் தனியாக ஒதுக்கப்பட்டார்கள். கறுப்பின மக்களின் நல்வாழ்வை விரும்பும் பத்திரிகை ஆசிரியரான ஐடா.பி.வெல்ஸ் அவர்களால் ஆவணப்படுத்தப்பட்ட கணக்குகளின்படி இக்காலப்பகுதியில் சட்டமுறையின்றிதான்தோன்றித்தனமாக கொல்லப்பட்ட ஆபிரிக்க அமெரிக்கர்களின் தொகை ஆண்டுக்கு நூறாக இருந்தது. சட்டப் பாதுகாப்பு வழங்க முடியாத வகையில் ஆபிரிக்க அமெரிக்கர்களை மனித இனத்திற்குக்கீழ்ப்பட்ட நிலைக்குத்தள்ளும் சட்டதிட்டங்களை ஜிம் குறோ உருவாக்கினார்.மக்கள் நிலைக்கு இழிவான நிலையில் மக்கள் இருந்தால் அவர்கள் எல்லோருக்கும் இல்லாவிட்டாலும் அவர்களில் சிலருக்குஎதிராகவாவது நினைத்துப் பார்க்க கூட முடியாத விடயங்களை செய்வதற்கு அனுமதியுண்டு.

இறப்பை உண்டாக்கும் வியாதிகள்: 1932 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 40 ஆண்டுகளுக்குப்பின்அசோசியேற்றட் செய்தி நிருபர் ஒருவரால் வெளிக்கொணரப்பட்ட இரகசியின் ஆய்வு என்ற போர்வையில் செய்யப்பட்ட ஆய்விலும் இதுபோன்ற நடவடிக்கைகள் நடந்தது.சிபிலிசு என்ற சமூக நோயால் பீடிக்கப்பட்டிருந்த 400 கறுப்பின ஆண்களையும் இந்நோயால் பீடிக்கப்படாத 201 பேரையும் இம்மக்களிடையே இந்த நோய் வளர்ச்சியடைவதன் காரணத்தைக் கண்டறிவதற்காக அமெரிக்க சுகாதார சேவையில் பணியாற்றும் மருத்துவர்கள் பரிசோத...

...ர்களுக்கு பண உதவி செய்யப்பட்டது. அமெரிக்க சுகாதார சேவை இந்த விடயத்தில் தனிமையாக செயலாற்றவில்லை. அலபாமா சுகாதார அலுவலகம் ரஜ்கிஜீ நிலையம்இரசுகியி முகவர் நிர்வாக வைத்தியசாலை மற்றும்மக்கொண்நகர சுகாதார அலுவலகம் ஆகியவையும் இதற்கு உதவியாக விருந்தன.

சில குழுக்களுடைய வாழ்க்கையையும், மனிதத் தன்மையையும் மதிப்பதை விட வேறு சில குழுக்களுடைய வாழ்க்கையையும், மனிதத் தன்மையையும் கூடுதலாகவும், மேலாகவும் அமெரிக்கர்கள் நாம் மதிக்கிறோம். இது அறிவுப் பிறழ்ச்சி ஆகாது. இது மரபுவழியாக வந்த பண்பாகவும் தற்போது நடைமுறையிலுள்ள உண்மையான விடயமாகவும் விளங்குகிறது. அத்துடன் இது அமெரிக்காவின் உள்நாட்டு, வெளிநாட்டு கொள்கைகளில் செல்வாக்குச் செலுத்துவதோடல்லாமல் பல இலட்சக்கணக்கான அமெரிக்கர்கள் அன்றாட வாழ்வில் ஒருவரோடு ஒருவர் கொள்ளும் தொடர்புகளிலும் சம்பந்தப்பட்டுள்ளது. பொதுநிதியை நாம் செலவு செய்யும் முறையை இது தீர்மானிக்க உதவுவதோடு கறுப்பின அமெரிக்கர்களின் சிசுமரணம், இளைஞர் மரணம், நடுத்தர மற்றும் வயோதிபர் மரணம் ஆகியவற்றின் ஏறுமாறான மாற்றத்துக்குக் காரணமாகும் புள்ளிவிபரங்களைப் படித்து விட்டும் அவற்றைத் தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருப்பதற்கும் இது உதவுகிறது. உதாரணத்துக்கு ஐயோவா மாநிலத்தில் மேற்கூறிய இறப்புக்களின் எண்ணிக்கைகள் திடீரென அதிகரிக்குமாயின் நாம் கவலையுற வேண்டும்.

கறுப்பின மகன் ஒருவர் கொலை செய்யப்பட்டால் கொலை செய்தவருக்கு ஒரு கண்டிப்பான தண்டனை வழங்கும் சட்டங்கள் இப்போது இல்லை. அதேவிதத்தில் ஆபிரிக்க அமெரிக்க மக்களை எவ்வித கேள்வி இன்றி கொலை செய்ய முடியும்...

தெரிவித்திருந்தார். பேரினவாதிகளின் இக்கோரிக்கைக்குச் செவிசாய்ப்பதனால் தமிழ்மக்கள் எதை விட்டுக் கொடுப்பது? சிங்கள பேரினவாதிகளின் ஆக்கிரமிப்பிற்குத் தமிழர் தாயகத்தை விட்டுக் கொடுப்பதா அல்லது தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ள படுகொலைகளைக் கண்மூடிப் பார்த்துக் கொண்டிருப்பதா? அல்லது தமிழரின் அடிப்படை உரிமைகள் யாவற்றையும் வழங்கி விட்டு அடிமைச் சேவகம் செய்வதா?.

சிங்கள பேரினவாதம் இவ்வாறான விட்டுக்கொடுப்புக்களை அதாவது சரணடைதலை தமிழர் மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கின்றது. அதையே அரசியல் தீர்வும் என்கிறது. அல்லது தமிழர் மீது படையெடுப்பு நடைபெறும் என மிரட்டிப் பார்க்கின்றது. அதாவது ஏற்புடைய ஓர் அரசியல் தீர்வைத்தர சிங்கள பேரினவாதம் தயாராக இல்லை. மிரட்டிப் பணிய வைக்கப் பார்கின்றது.

இராணுவத் தீர்வு எந்தளவிற்கு வெற்றி அளிக்கும் என்பது கேள்விக்குரியதாயினும் சிறிலங்கா அரசாங்கம் இராணுவத்தை ஏவி யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதன் மூலம் இறுதி வெற்றியை ஈட்டிவிடலாம் என்ற நோக்கிலேயே தாக்குதலுக்குத் தயாராகி வருகின்றது.

இந்நிலையில், குடாநாட்டின் மீது பெரும் போர் ஒன்றை தற்பொழுது சிறிலங்கா இராணுவம் திணிப்பதற்குத் தயாராகியுள்ளது. ஆயினும், இப்போரை எதிர்கொள்ளவும், எதிரியை முறியடிக்கவும் மக்கள் தயாராக வேண்டும். போராட்டம் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும் இடையில் நடைபெறப் போவதொன்றல்ல. தமிழ்மக்கள் இதில் பார்வையாளர்களும் அல்ல.

போர் தமிழ் மக்களுக்கு எதிராகவே நடைபெறப் போகின்றது. இதில் சிறிலங்கா ஆக்கிரமிக்க முற்படுவது தமிழ்மக்களின் தாயகமண்ணை. அதாவது உங்கள் காணிகளையே ஆக்கிரமிக்கவே போகின்றான் தமிழ் மக்களின் உடைமைகளையே சூறையாட முயற்சிக்கின்றான்.

இதில் விடுதலைப் புலிகள் உங்கள் உடைமைகளையும், உயிரையும் பாதுகாக்கப் போராடும் ஒரு சக்தி புலிகளை அழித்துவிட்டால் தமிழ்மக்களை அழித்து விடலாம், தமிழ்மண்ணை ஆக்கிரமித்து விடலாம் என எதிரி எண்ணுகின்றான்.

இந்நிலையில் தமிழ் மக்கள் தம்மைக் காப்பதோடு தமது மண்ணையும் பாதுகாக்க அணிதிரண்டு போராட வேண்டும். போராடும் புலிகளுக்குப் பக்க பலமாக வேண்டும். புலிகளிடம் இழப்பதற்கு உயிரைத் தவிர வேறு எதுவும் இருப்பதாக இல்லை. ஆனால், மக்களிடம் உயிரோடு உடைமைகளும் உண்டு. அவற்றைப் பாதுகாக்க வேண்டும். புலிகளுடன் இணைந்து போராட வேண்டும். போராட்டத்திற்கான ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும். இது உதவியலல, தமது உரிமைகளைப் பாதுகாப்பதற்கான கடமை.

லைத் திட்டங்களைப்பற்றி எவரும் பயப்படத் தேவையில்லை. ஆனால் மேற்படி நடவடிக்கைகள் அவ்வித திட்டமிருப்பதை தெளிவாகவும் திட்டவட்டமாகவும், தப்பித்துக்கொள்ள முடியாததுமான விதத்தில்வெளிக்காட்டுகிறது.

கறுப்பின மக்களை உயிரோடு வைத்திருந்து வேலை வாங்குவதே நோக்கமானதாக இருந்ததால் இனப்படுகொலை எனக் கூறமுடியாவிடினும் இறப்புகளையும் மனித உரிமைக்கும் ஏற்பட்ட அழிவுகளையும் நோக்குமிடத்து இழப்புக்கள் கூடியனவாகவே

வையாளரும் இவ்வமைப்பில் சேர்ந்தார்கள். பிலடெல்பியாவின் கறுப்பர்களின் வரலாற்றைத் திறம்பட எழுதிய கரிநாசின் போஜிஸ் பிறீடம் என்ற நூலில், 3000 சுதந்திரக் கறுப்பின மக்கள் 1817இல் பெதல் ஆபிரிக்கன் மெதடிஸ்ற்எப்பிஸ்பேராயல் திருச்சபையில ஒன்று கூடி இத்திட்டத்தை ஆட்சேபித்தனர் என்று கூறப்பட்டுள்ளது கூடுதலான சுதந்திரம் பெறும் நோக்கில் அமெரிக்காவைவிட்டு வெளியேற சிலர் விரும்பியபோதும், "ஒரே இரத்தத்தால் பிணைக்கப்பட்டும், அவர்களுடைய இன்ப துன்பங்களில் பங்கு பற்

யான தாக்கத்தை ஏற்படுத்தியது என்று வரலாற்று ஆசிரியர் வான்வுட்வேட்டின் ஆவணங்கள் எடுத்துக்காட்டுகின்றன. அதன்படி 1896 க்கும் 1904க்குமிடையில் லூசியானாவிலிருந்து 130,334 ஆக இருந்த கறுப்பின வாக்காளர்களின் தொகை 1 342 ஆகக் குறைந்தது. அதே காலப்பகுதியில் 26 மாநில வட்டாரங்களில் பெரும்பான்மையோராகப் பதிவு செய்யப்பட்டிருந்த நீக்ரோக்கள் அந்த 26 மாநில வட்டாரம் ஒன்றிலேனும் பெரும்பான்மையற்றவர்களாக்கப்பட்டனர்.

கண்டறிவதற்காக அமெரிக்க சுகாதார சேவையில் பணியாற்றும் மருத்துவர்கள் பரிசோதனைக்குட்படுத்தினர். இந்நோய்க்கு மருத்துவம், செய்யாதுவிடின் அது இறப்பை ஏற்படுத்தும் என்பதை இவ்வைத்தியர்கள் நன்கு அறிவர். இந்நோயால் பீடிக்கப்பட்ட ஆண்களுக்கு சிகிச்சை அளிக்காமலும், இந்நோயின் உண்மையான தன்மை மற்றும் அதன் பயங்கர விளைவுகள் பற்றி இந்நோய் கண்டவர்களுக்கு அறிவுறுத்தாமலும் வெறுமனே தங்கள் ஆய்வுக்கு உட்படுத்த ஊக்கமளிக்கும் நோக்கில் இவ

களை எவ்வித கேள்வி இன்றி கொலை செய்ய முடியும் என்று கூறுவதிலும் உண்மை இல்லை. ஆனால் அமெரிக்காவில் ஆபிரிக்க அமெரிக்க மக்களின் வாழ்வின் தரம் நீண்ட காலத்திலிருந்து இப்பவும் கூட மிகவும் குறைந்த மதிப்பற்ற நிலையில் உள்ளது என்பது உண்மையே. குவின்டொவின் புறாக்கே அவர்களுடைய செய்யுளில் கூறியதை மேற்கோள் காட்டுவதாகில் "நாங்கள் விரைவில் இறந்து விடுவோம்" என்பது உண்மையே.

# மொஸ்கோவில் புதிய தூதரகம் அமைக்க அமெரிக்கா இணக்கம்

(வாஷிங்டன்)

மொஸ்கோவிலுள்ள தனது புதிய தூதரகத்தில் ஒற்றுக் கேட்கும் கருவிகளை பொருத்தியதற்காக ரஷ்யாவிடம் கோரியிருந்த மூன்று கோடி டொலரை அமெரிக்கா கைவிட்டுவிட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது

அதற்குப் பதிலாக மொஸ்கோவில் புதிய தூதரகம் ஒன்றைக் கட்டுவதற்கானகாணித்துண்டு ஒன்றை ரஷ்யா வழங்குவதுடன் நாலரைக் கோடி டொலர் பெறுமதியான தற்போதைய அமெரிக்கத் தூதரகத்தை நீண்டகாலம் குத்தகைக்கு விடவும்இணங்கியுள்ளது.

ஜோர்ஜ் புஷ் - பொரிஸ் யெல்டஸின் உச்சிமாநாட்டின் போது. அமெரிக்க - ரஷ்ய வெளிநாட்டு அமைச்சர்கள் இதற்கான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இருநாடுகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள இணக்கத்தின்படி வாஷிங்டனில் மவுண்ட் அல்டோவுக்கு அருகில் முன்னாள் சோவியத் யூனியன் கட்டியுள்ள தூதரகக் காணியை ரஷ்யாவுக்கு வழங்க அமெரிக்கா சம்மதித்துள்ளது.

மொஸ்கோவிலுள்ள புதிய அமெரிக்க தூதரகத்தின்கட்டுமான வேலைகள் ஒற்றுக் கேட்கும் கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து 1985 ஆம் ஆண்டு நிறுத்திவைக்கப்பட்டன. சோவியத் தொழிலாளர்களேகட்டுமானவேலையில் ஈடுபட்டிருந்தனர். இதற்குப் பதிலடியாக வாஷிங்டனில் கட்டப்பட்ட புதிய சோவியத் தூதரகத்தைப் பாவிக்க அமெரிக்கா தடை விதித்திருந்தது.

# கம்போடியாவுக்கு உதவி; டோக்கியோவில் மாநாடு

(டோக்கியோ)

கம்போடியாவில் புனர்நிர்மானப் பணிகளுக்கு உதவுவது பற்றிய மாநாடு டோக்கியோவில நடந்ததிங்கட்கிழமை முடிவடைந்தது. கம்போடியாவில் ஐ நாவின் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத்தர கெமரூச் அணி மறுத்திருப்பது குறித்து இம்மாநாடு பிரகடனம் ஒன்றில் கவலை வெளியிட்டுள்ளது.

பாண்டும் சமாதான நடவடிக்கையின்கீழ் தனது பொறுப்புக்களை நிறைவேற்றுமாறு கெமரூச் அமைப்பை இம் மாநாடு கேட்டுக்கொண்டுள்ளது.

கம்போடியாவில் வியட்நாம் துருப்புக்கள் இருப்பதாக கெமரூச் அணியினர் கூறும் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கான வழிமுறை ஒன்றையும் இம்மாநாடு சிபாரிசு செய்துள்ளது,

## அரசசபையிடம் ஆட்சிஅதிகாரம்

ஆப்கானிஸ்தானில் பலதரப்பு பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய ஓர் அரசு சபையிடம் ஆட்சி அதிகாரம் இன்று ஒப்படைக்கப்படவுள்ளது. அரசாங்கத்தை நடத்துவதற்காக பேராசிரியர் சிப்துல்லா முஜாத்தீக்கு வழங்கப்பட்ட சட்டபூர்வ காலக்கெடு முடிவடைவதற்கு மூன்று நாட்கள் முன்பாகவே இவ்வாறு ஆட்சிபரிமாறப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேலிய தேர்தல்களில் தொழிலாளர் கட்சி வெற்றி

(டெல்அவிவ்)

இஸ்ரேலில் நேற்று முன் தினம் நடைபெற்ற தேர்தலில் எதிர்க் கட்சியான தொழிலாளர் கட்சி வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கட்சியின் தலைவர் யிட்சாக ரொபினும் வெற்றி பெற்றுள்ளார். தொழிலாளர் கட்சிக்குக் கிடைத்த நாற்பத்தியேழு இடங்களுடன் பாராளுமன்றத்தில் இடதுசாரிகளுக்கு அறுபத்திநான்கு இடங்கள் கிடைத்திருப்பதாக அரச தொலைக்காட்சி அறிவித்துள்ளது.

தற்போதைய பிரதமர் யிட்சாக் ஷமிரின் லிகுட் கட்சிக்கு முப்பத்து மூன்று இடங்கள் மட்டுமே கிடைத்துள்ளது;

## அர. நெருக்கடியைத் தீர்க்க மண்டேலா கோரிக்கை

தென் ஆபிரிக்காவில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு உதவ முன்வருமாறு தென் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா கோரிக்கை விடுத்துள்ளார். ஐ நா. தலைமைச் செயலாளர் பூட்டர்ஸ் பூட்டர்ஸ் காலியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய நெல்சன் மண்டேலா தென் ஆபிரிக்காவில் விரைந்து மோசமடைந்து வரும் நிலையை இயல்பு நிலைக்குக் கொண்டு வர ஏதாவது வழி காணுமாறு கேட்டுக் கொண்டார்.

கடந்த புதனன்று ஜோகானஸ்பெர்க்கிற்கு அருகே ஆயுதம் தாங்கிய இருபது பேர் கொண்ட குழுவொன்று பெண்கள். குழந்தைகள் உட்பட முப்பத்தொன்பது பேரைப் படுகொலை செய்த சம்பவத்துடன் தென் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அரசுடனான பேச்சுக்களை முறித்துக் கொண்டது தெரிந்ததே.

## அணு தண்டு பரிசோதனை

அமெரிக்கா நேற்று முன் தினம் நிவாடாப் பாலைவனத்தில் அணு தண்டு ஒன்றை நிலத்தடியில் வெடிக்கவைத்து சோதனை ஒன்றை நடத்தியது இருபது கிலோ தொன் டி. என். டி. திறன் கொண்டதாக இந்த வெடிப்பு இருந்ததாக அறிவிக்கப்படுகிறது.

ஈழநாதம்

## சிறிலங்கா அரசு சூறையாடுகிறது; ஜெயலலிதா அரசு பார்த்திருக்கிறது

### -பண்ருட்டி ராமச்சந்திரன் கண்டனம்

(சென்னை)

இலங்கையின் யாழ்ப்பாணத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு ஊரடங்கு அமுலாக்கப்பட்டுள்ளது. முப்படைகளைக் கொண்ட சிங்கள அரசு தமிழர்களை தாக்கிக்கொண்டு இருக்கிறது கப்பல்படை விமானப்படை மற்றும் பீரங்கிகளைக் கொண்டும் சுமார் 45,000 துருப்புக்களைக் கொண்டு தமிழ் மக்களை சூறையாடிக் கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து இந்த இனப்படுகொலை நடந்தால் யாழ்ப்பாணத்தில் உள்ள அத்தனை தமிழ் மக்களும் காவு கொடுக்கப்படுவார்கள்.

இவ்வாறு சென்னை கொழும்புப் பேட்டையில் உள்ள நேதாஜி நகரில் அ. தி. மு. க. ஆட்சியின் அடக்குமுறையை கண்டித்து பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பண்ருட்டி இராமச்சந்திரன் உரை நிகழ்த்தினார். அவர் தொடர்ந்து பேசுகையில்,

இந்திய அரசும் தமிழக அரசும் தமிழர்களுக்கு கைகொடுக்காது என்ற துணிவு சிங்கள இராணுவத்துக்கு பிறந்திருக்கிறது எனவே தமிழர்களை, தாய்மார்களை, குழந்தைகளை சூறையாடிக்கொண்டிருக்கிறார்கள்.

இதேநேரம் இலங்கையில் இனப்படுகொலை நடக்கும் நேரத்தில் தமிழக அரசு சார்பில் ஏதாவது அறிவிப்பு வருகிறதா என்றும் எதிர்பார்த்தோம் அறிவிப்பு வருகிறது அது என்னவென்றால் காலை எட்டு மணிமுதல் இரவு பதினொரு மணிவரை பார் நடத்தலாம் என்றும் மது விலை குறைப்பு என்றும் அறிவிப்பு வருகிறது.

இனப்படுகொலை நடைபெறாமல் தடுக்கவேண்டும் என நாங்கள் எச்சரித்தோம் ஆனால் அது செவிடன்காதில் ஊதிய சங்காகிவிட்டது.

மேலும் கொலைக் களத்துக்கு அனுப்புவது போலவே ஜெயலலிதா இலங்கைத் தமிழ் அகதிகளை கட்டாயமாக திருப்பி அனுப்புகிறார்.

மேலும் விடுதலைப் புலிகளை தடைசெய்ய மத்திய அரசே தடைக்கு ராஜீவ் கொலையை காரணம் காட்டவில்லை. இத்தடையைப் பயன்படுத்தி ஆர் வீரப்பனைக்கூட பழிவாங்க தயங்கமாட்டார். கொலைக் குற்றத்தை விசாரித்து தண்டனை வழங்க சட்டம் இருக்கிறது.

ராஜீவ் காந்தி கொலையில் விசாரிக்கவேண்டியது ஏராளம் இருக்கிறது விடுதலைப் புலிகள்தான் காரணம் என்று கை கழுவி விடாதீர்கள். விடுதலைப் புலிகளுடன் நிறுத்தி பிரச்சினையை கைகழுவ முயற்சிப்பதை ஏற்கமுடியாது.

அத்துடன் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியே ராஜீவ் கொலைக்கு உள்கை பின்னணி உள்ளதென்று கூறுகிறது. எனவே அதனை ஆராய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## இலங்கை அகதிகளை திருப்பி அனுப்புதல் விரைவில் ஆரம்பமாகும்

### - ராம்தாஸ்

(சென்னை)

இலங்கை தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கைகள் மீண்டும் விரைவில் ஆரம்பமாகும் என இலங்கை அகதிகளுக்கான மாநில ஒருங்கிணைப்பு அதிகாரி சி. எஸ். ராம்தாஸ் தெரிவித்துள்ளார்.

1990 ஜூனில் 337 முகாம்களில் இலங்கை அகதிகள் இருந்தனர் இப்போது 18 மாவட்டங்களில் 163 முகாம்களே உள்ளன. இவற்றில் 88.000 பேர் உள்ளனர்.

நாடு திரும்புமாறு இலங்கை அகதிகளை தூண்டும் கொள்கையில் எந்த வித மாற்றமுமில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சட்டம் ஒழுங்கை குலைக்க கருணாநிதி முயற்சி

### ஜெயலலிதா குற்றச்சாட்டு

(சென்னை)

ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்வதன் மூலமாக திராவிட முன்னேற்றக் கழக தலைவர் மு. கருணாநிதி தமிழ் நாட்டில் அமைதியைக் குலைக்க முயற்சிக்கின்றார் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா குற்றஞ்சாட்டியுள்ளார் மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு நிலைமை முற்றாகச் சீர்குலைந்துவிட்டுள்ளதென மதுரையில் கருணாநிதி தெரிவிக்கும் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளி[த்த]...

...யின் கீழான தற்போதைய அரசாங்கம் மாநிலத்தில் எவ்வாறு சட்டம், ஒழுங்கை மீளவும் நிலைநாட்டிப் பேணிவருகிறதென்பதை மக்கள் நன்கறிவர் என்றும், அந்த அமைதியைக் குலைக்க சகல முயற்சிகளையும் கருணாநிதி செய்கின்...

பதுக்கல்

விதிக்கப்படுவதுடன் குறிப்...

## சவூதி தூதரகம்

கொழும்பில் சவூதி அரேபியா தூதரகம் ஒன்றைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக முஸ்லிம் சமய கலாசார அமைச்சர் ஏ.எச்.எம் அஸ்வர் சவூதி அரேபிய அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

## அமெரிக்கா, இஸ்ரேலுக்கு எதிராக மக்காவில் மாபெரும் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அமெரிக்கா, இஸ்ரேல் ஆகியவற்றின் நடவடிக்கைகளை எதிர்த்து இம்முறையும் புனித மக்காவில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடைபெற்றது இதில் இரண்டு இலட்சம் மக்கள் கலந்து கொண்டதாகவும் இவ் ஊர்வலத்தில் தமிழ் மொழியிலும் சுலோக அட்டைகள் எடுத்துச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சவூதி அரேபியா அரசின் அனுமதியுடன் இந்த ஊர்வலம் நடந்ததாகவும் இவ் ஆர்ப்பாட்டத்தில் சவூதி மக்களும் முதல் தடவையாக கலந்து கொண்டதாகவும் அமெரிக்காவுக்கும், இஸ்ரேலுக்கு எதிரான சுலோகங்களை இவர்கள் கோஷித்தாகவும் தெரியவருகிறது.

இவ் மாபெரும் ஆர்ப்பாட்டத்திற்கு முன்னோடியாக இரண்டு நாள் சர்வதேச ஹஜ் மாநாடு ஒன்றும் நடைபெற்றது

இதில் அல்ஜீரியா, ஆப்கானிஸ்தான், காஷ்மீர், யூகோஸ்லாவியா, அல்பேனியா, ஸ்பெயின், பர்மா, அஸர்பைஜான் போன்ற நாடுகளின் விடுதலை இயக்கங்களினதும் ஈராக், லிபியா பிரதிநிதிகள் உட்பட 52 நாட்டு பிரதிநிதிகளும் பங்குபற்றினார்கள்.

## சைபிரஸ் விவகாரம் முத்தரப்பு பேச்சு

சைபிரஸ் ஜனாதிபதி ஜோன்பெஸிலோஸ் அங்குள்ள துருக்கியத் தலைவர் ராவுப்டென்டாஸும் ஐ.கிய நாடுகள் செயலாளர் பூட்ரஸ் ஹாலியுடன் ஐந்துநாட்களாக தனித்தனியாக பேச்சுவார்த்தைகளை நடாத்தி உள்ளனர்.

கடந்த இரண்டு வருடங்களில் முதல்தடவையாக இந்த நேரடிச்சந்திப்பு இடம் பெற்றுள்ளன. அடுத்த மாதம் 15 ஆம் திகதி மீண்டும் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கும் அவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

பிளவுபட்ட சைபிரஸை இரு சமூக இணைப்புடைய சமஷ்டி அமைப்பை மீண்டும் ஒன்றிணைப்பதற்கு ஐ.நா. செயலாளர் நாயகம் பூட்ரிஸ் காலி முயற்சி எடுத்துவருகிறார்.

நிக்கோஸியாவில் சதிப் புரட்சி ஏற்பட்டதன் பின்னர் துருக்கிய படைகள் 1977 ஆம் ஆண்டு தீவின் வடபகுதியை முற்றுகையிட்டது முதல் சைபிரஸ் பெரும்பாலும் பிளவுபட்டே இருக்கிறது. பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமானதாகவே அமைந்தது என ஐ.நா செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது

## 2000 ஆண்டளவில் 12 கோடி எயிட்ஸ்நோயாளர் இருப்பர்

இரண்டாயிரமாவது ஆண்டளவில் எயிட்ஸ் நோய் சம்பந்தப்பட்ட வைரசினால் (எச்.ஐ.வி.) ஒருகோடி சிறுவர்கள் உட்பட பன்னிரண்டு கோடிக்கும் அதிகமான மக்கள் இந்நோயினால் பீடிக்கப்படுவார்கள் என்று ஹவாய் பல்கலைக்கழக சர்வதேச எயிட்ஸ் நோய்த் தடுப்பு நிலையம் தெரிவித்துள்ளது,

இந்நேவேளை எயிட்ஸ் நோய்க்கு உள்ளாகுபவர்களின் எண்ணிக்கை சுமார் பத்து மடங்காக அதிகரிக்கும் எனவும் ஆய்வாளர் குழுக்கள் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர்.

"1992 ஆம் ஆண்டில் உலகில் எயிட்ஸ்" என்ற தலைப்பிலான அறிக்கையில் தென்கிழக்காசியாவில் குறிப்பாக தாய்லாந்து. பர்மா, இந்தியா போன்ற நாடுகளில் எயிட்ஸ் நோய் மிக வேகமாக பரவி வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

மேலும் அமெரிக்காவில் மாத்திரம் இவ்வாண்டு 40 000 இருந்து 80.000 வரையிலானவர்கள் இந்நோயினால் பீடிக்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

## 300 மணி நேர தொடர் இசை நிகழ்ச்சி

### கின்னஸ் சாதனை முயற்சி

(சென்னை)

உலக சாதனையை முறியடிக்க மூன்று இளைஞர்கள் 300 மணிநேர தொடர் இசை நிகழ்ச்சியொன்றை சென்னையில் ஆரம்பித்துள்ளனர்

1986 இல் அவுஸ்திரேலிய இளைஞர் 131 மணி நேர இசை நிகழ்ச்சி நடாத்தி கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றிருந்தது.

இச்சாதனை முறியடிக்க ஜூன் 17 இரவு எட்டு மணிக்கு இந்த இசை நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட உள்ளது.

கே. மாரிமுத்து என்பவர் பாடல் இயற்ற அதை செல்லப்பா இராஜேஸ்வரன் பாட எம்.ஹ ஜீ இசையமைக்கிறார். எதிர்வரும 30-ம் திகதி வரை இந்த இசை நிகழ்ச்சியை நடாத்ததிட்டமிட்டுள்ளனர்

ஒரு மணிநேரத்துக்கு ஐந்து நிமிட ஓய்வு என்ற கின்னஸ் விதிமுறையின் பிரகாரமே இவர்கள் ஓய்வு எடுப்பர்.

## வலி . வடக்கு மக்களுக்கு மேலும் இரு வாரங்களுக்கு உலர் உணவு நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

வலி . வடக்குப் பகுதிகளில் இடம்பெற்ற சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்த மக்களுக்கு மேலும் இரு வாரங்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட உள்ளது.

இதுவரை ஒரு வாரத்துக்கு மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது. அடுத்துவரும் இரு வாரங்களிலும் இவ் உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட இருக்கிறது இதற்கான சகல ஏற்பாடுகளையும் யாழ் செயலகம் மேற்கொண்டுள்ளது.

(க). (ச)

## தொழில்நுட்பக் கல்லூரிகளில் பதவிவெற்றிடம்

கல்வி உயர்கல்வி அமைச்சின் கீழ் உள்ள தொழில் நுட்பக் கல்லூரிகளில் காணப்படும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

இது தொடர்பான விபரங்கள் 19-06-92 வர்த்தமானியில் வெளியாகியுள்ளன.

## பெற்றோல் மதுசாரம் தயாரிப்பது கண்டுபிடிப்பு

பெற்றோலைக் கொண்டு தயாரிக்கப்படும் புதுவித மதுபானம் சிறிலங்காவில் பயன்படுத்தப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று கொழும்புப் பல்கலைக்கழக மருந்துவபீட இரசாயன விரிவுரையாளர் பேராசிரியர் முனஹ கஸாபே தாவொட தெரிவித்துள்ளார்.

## தகவல் வழங்க தவறியதாக

பதுக்கலி
விதிக்கப்படுவதுடன் குறிப்பிட்ட காலத்திற்கு தடுத்தும் வைக்கப்படுவர். இவ்வாறு மக்களின் அத்தியாவசியப் பொருட்களைப் பதுக்குவோர், கூடிய விலையில் விற்போர் பற்றிய தகவல்களை அண்மையில் உள்ள காவல் பணிமனைக்கு உடனுக்குடன் தெரிவிக்குமாறு சகல பொது மக்களையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

இன்று பொதுமக்கள் கொடுத்த தகவலை வைத்து கூடிய விலையில் விற்றார்கள் எனும் சந்தேகத்தின் பேரில் ஒரு சில மண்ணெண்ணெய் வர்த்தகர்கள் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருவிட்டுள்ளனெ மதுரையில் கருணநிதி தெரிவிக்கும் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும வகையில் ஜெபலலிதா கூறுகையில் தனது தலைமை

என்றும், அந்த அமைதியைக் குலைக்க சகல முயற்சிகளையும் கருணாநிதி செய்கின்றார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# முடியுமானால் வழக்கு தாக்கல் செய்யட்டும்

## கருணாநிதிஜெயலலிதாவிற்கு சவால்

(சென்னை)

ஜெயலலிதா அரசுக்கு எதிராக குற்றச்சாட்டுகளை சுமத்தி ஜெயலலிதா மீது நான் திட்டமிட்டே சேறு பூசுவதாக அவர் நினைப்பதாக இருந்தால் எனக்கு எதிராக மான நஷ்ட வழக்குத் தொடரட்டும் எனக் கருணாநிதி சவால் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையொன்றில் டிரான்சி நிலக் கொள்வனவு விடயத்தில் ஜெயலலிதா ஒழுங்கீனமாக நடந்து கொண்டுள்ளார் என்றும், அரசுக்குச் சொந்தமான பியர் தொழிற்சாலையொன்று தனியாருக்கு விற்பனை செய்த விவகாரமும் நம்பகத்தன்மை கொண்டதாகவில்லையென்றும், குறிப்பிட்டுள்ளார்.

---

புலிகளின்

வுகள் இராணுவத்துக்கு மகிழ்வை ஊட்டினாலும் தமது கட்டுப்பாட்டுக்குள் உள்ளன என்று இராணுவ அதிகாரிகள் கூறும் பிரதேசங்களில் பெருமளவில் விடுதலைப் புலிகள் இயங்கிவருவது இராணுவ அதிகாரிகளைச் சலனமடையவைத்துள்ளது. சொல்லப்போனால் இது பாதுகாப்புப் படையினருக்குத் தீவிரகவலையாகவும் உள்ளது.

இவ்வாறு பி.பி.ஸி. மேலும் குறிப்பிடுகிறது.

---

இந்து

விரைந்த விடுதலைப்புலிகள் பாடசாலையினுள் தீவிர சோதனையை மேற்கொண்ட போதும் இதுதொடர்பான எதுவித தடையமும் கிடைக்கவில்லை அதனை அடுத்து இது திட்டமிட்டு பரப்பபட்ட வதந்தி எனச்செரியவந்தது.

---

பேராசிரியர்

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (05)

# தகவல் வழங்க தவறியதாக நிர்மலா மீது குற்றச்சாட்டு

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் செல்வரத்தினம் நிர்மலாதேவி என்ற நிர்மலா 01-01-1990 க்கும் 01-08-1990 க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் களுவாஞ்சிக்குடி, ஒந்தாச்சி மடத்தில் சபாரத்தினம் கருணாரத்தினம் ஆகியோர் விடுதலைப் புலிகளுக்காக தமிழ் நாடு அமைப்பதற்கு மகளிர் மன்றம் என்ற பெயரில் பெண்களை திரட்டுவதினை தெரிந்திருந்தும் பொலிசாருக்கு தகவல் கொடுக்க தவறிய குற்றச்சாட்டில் 9-4-92 கைது செய்யப்பட்டிருந்தார்.

இவரது வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை நீதிபதி வெஸ்லி அபயசேகரா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி கௌரிசங்கரி, தவராஜா, எஸ். களுபஹன ஆகியோரின் அனுசரணையுடன் ஜனாதிபதி சட்டத்தரணிஎம். எல். எம். அமீன் ஆஜரானார்.

---

வர்த்தகர்கள்

பெற்றுக்கொள்வதற்காக இலங்கையில் அமெரிக்க நிறுவனங்களுக்கு சிறந்த முதலீட்டு வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கும் உதவும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அமெரிக்க முதலீட்டை அதிகரிப்பது பொருளாதார ரீதியில் இருதரப்பினருக்கும் நன்மையளிக்கக் கூடியதாக இருக்குமென்றும் அதேநேரம் அமெரிக்க - இலங்கை இருதரப்பு உறவுகளும் வலுவுறுவதற்கும் இதுஆதாரமாக இருக்கும்.

அத்துடன் இலங்கை சர்வதேச ரீதியில் போட்டியிடக் கூடிய வகையில் ஸ்திரமான பொருளாதாரநிலைதக் கொண்டிருப்பது அமெரிக்காவின் சொந்த நலனுக்கேஆகும் எனவும் ஹோசி சுட்டிக்காட்டினார்.

இலங்கை அமெரிக்காவின் ஏற்றுமதிக் கொள்கையை வரவேற்பதுடன் அமெரிக்காவுக்கு தேவையான பொருள்களை ஏற்றுமதி செய்வதும் விரும்பத்தக்கது எனவும் இலங்கை தனது பொருளாதாரத்தை சீர்திருத்தி அமைக்கும் முயற்சியில் கஷ்டமானதும் முக்கியமானதுமான நடவடிக்கையினைமேற்கொண்டுள்ளதுஎனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

மட்டு.

இல்லாது ஒழிப்பதற்கும் மேற்கொண்டு வரும் சதி நடவடிக்கைகளின் தொடர்ச்சியே இது என்று அங்குள்ள தமிழ்]மக்கள் பேசிக் கொள்கின்றனர்.

---

மகாராஜபுரம

னும் விபத்தில் கொல்லப்பட்டார். மகாராஜபுரம் சந்தானத்தின் மனைவியும், மற்றொரு பெண்ணும் பலத்த காயமடைந்தார்கள்.

இவர்கள் கும்பகோணத்திலிருந்து சென்னை நோக்கிக் காரில் வந்து கொண்டிருந்த போது விழுப்புரத்துக்கருகில் நின்று கொண்டிருந்த டிராக்டர் ஒன்றில் அந்தக்கார் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டது.

இவர் மருதனாமடம் இராமநாதன் அக்கடமியிலும் பணியாற்றியிருக்கிறார் சங்கீத கலாநிதி, பத்மசிறி போன்ற விருதுகளைப் பெற்ற சந்தானம், உலகெங்கும் சென்று கர்நாடக இசையை வளர்த்தவர்.

டுள்ளது. (க). (ச)

---

## சித்திர, சிற்பக் கண்காட்சி

மருதனாமடக் கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகளின் சித்திரங்கள் சிற்பங்கள் அடங்கிய கண்காட்சி நேற்று பிற்பகல் 2.00 மணியளவில கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் அவர்களால் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் மங்கள விளக்கேற்றி நாடா வெட்டப்பட்டு சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இக்கண்காட்சி இன்றும், நாளையும் தொடர்ந்து இடம்பெறும்.

## தையல் பயிற்சி நெறி

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையினர் வலிகாமம் மேற்கைச் சேர்ந்த படித்த யுவதிகளுக்கான இலவச தையல் பயிற்சி நெறி ஒன்றை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ் இலவச தையல் பயிற்சி நெறியில் முதல் கட்டமாக 165 யுவதிகள் பயிற்சி பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

வர்பேராசிரியர் முனைஹசா பேதாகொட தெரிவித்துள்ளார்.

## ஓய்வூதிய வவுச்சர்கள்

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்கள் தமது ஜூன் 1992 ற்குரிய ஓய்வூதிய வவுச்சர்களையும் பணத்தினையும் புதன்கிழமையிலிருந்து மானிப்பாய் நகர மண்டபத்தில் இயங்கும் தெல்லிப்பழை கிராமிய வங்கியில் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஏழாவது தொடர் முதலாம் இரண்டாம் இலக்கப் புள்ளிகளுக்கான வறுமை நிவாரண முத்திரை விநியோகம் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகள் மூலம் நடைபெறுகின்றது. [ச]

## கவலை தெரிவிப்பு

பாரம்பரிய தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாட்டுக்கோலங்கள் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு வரும் நிலைமையையிட்டு உலகத் தமிழ்ப் பண்பாட்டுக்கழகம் இலங்கைக் கிளை ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது.

---

# மரண அறிவித்தல்

## முருகையா - செல்லம்மா

(கீரிமலை)

கீரிமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கொக்குவில் கிழக்கு சேர்ச் லேனில் வசித்தவருமாகிய முருகையா - செல்லம்மா சிவபதமடைந்தார்.

இவர் காலஞ் சென்ற ஐயாத்துரை முருகையாவின் அன்பு மனைவியும், விசாகப் பெருமாள், திருமதி அகிலாம்பிகை, திருமதி இராஜேஸ்வரி, தம்பித்துரை (எழிலகம். ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் தேவாலய ஒழுங்கை 23-ம் இலக்க இல்லத்தில் நடைபெற்று இன்று (25 - 6 - 92) வியாழக்கிழமை பி. ப. 2-00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை, உற்றார் ,உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
(சி/4594) மு. தம்பித்துரை (மகன்)

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

24. 06. 1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 4542

வடபகுதிக்கு வெளியே செல்ல அனுமதித்த வாகன இலக்கங்கள்:-

26-3518 26 427, 26-6320. 26-4436, 28-2829 42-2157, 24-4507, 41-9404, 27-1939, 41-5417, 27-7419, 26-9495 26-4990. 42-6157, 40-2297. 41-7109, 42-3615, 25-4251, 37-4563, 36-5707, 25-4886, 37-1841.

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-

42-1178. 41-1227 41-9556, 24-9938, 28-9633, 41-9663, 36-5066, 37-3822, 25-9390.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது